# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2239/69 - 2021 අගෝස්තු මස 07 වැනි සෙනසුරාදා - 2021.08.07

*2239/69 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 07 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு கிரிஎல்ல புதிய நீர் வழங்கல் செயல்திட்டத்திற்காக, நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*தொடர்பு இல.: DVP/02/04/RN/83.*
*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2021, ஒகத்து 04.*


1A – G 34809– 31 (2021/08)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*இரத்தினபுரி மாவட்டத்திலே, கிரிஉல்ல பிரதேச செயலகப் பிரிவில், மாடுவாகல பிரிவில் 149ஏ கிராம அலுவலர் பிரிவில், மாடுவாகல கிராமத்தில் மாடுவாகல வத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து 01 ஏக்கர், 02 றூட் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

வடக்கு : மாடுவாகல வத்த;
கிழக்கு : மாடுவாகல வத்த ;
தெற்கு : மாடுவாகல வத்த ;
மேற்கு : மாடுவாகல தோட்ட வீதி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* 01. பலாங்கொடை பெருந்தோட்ட நிறுவகம்,
பாம் கார்டின்,
இரத்தினபுரி.

*08-320*

---

*திருத்தம்*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் ஊடாக எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2181/28 மற்றும் 2020.06.26 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 1A பக்கத்தில் மற்றும் மற்றும் 2A பக்கத்தில் இலக்கம் 07-329 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில், காணியை சுவீகரித்துக் கொள்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடாக கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவான்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் பஸ்நாகொட நீர்த்தேக்கத்தின் காரணமாக பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய பொதுமக்களை மீண்டும் குடியமர்த்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள காணிப்பகுதிக்கு உட்செல்லும் பாதையை நிர்மாணிப்பதற்கான காணிப்பகுதி யொன்றினை சுவீகரித்துக் கொள்ளல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாயினும் அது கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவான்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் பஸ்நாகொட நீர்த்தேக்கத்தின் காரணமாக பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய பொதுமக்களை மீண்டும் குடியமர்த்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள காணிப்பகுதிக்கு உட்செல்லும் பாதையாக பயன்படுத்தப்பட்ட வீதியின் பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்ளல் என திருத்தம் செய்யப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல.: DVP/02/03/GQ/76.
*நீர் வழங்கல் அமைச்சு,*
இலக்கம் 35, "லக்திய மெதுர",
*புதிய பாராளுமன்ற வீதி,*
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2021, யூலை 29.*

*08-321*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.